**ADM COURT, SANKARANKOVIL**

**தேதி 09.06.2026**

**அசல் வழக்கு எண். 271/2013**

**வா.சா.1 (செல்லத்துரை) மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் 2 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் என்ன பரிகாரம்கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1ம்பிரதிவாதி எனது இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதற்கு எதிராக எனது இடம் எனக்கு வேண்டும் என்று கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செயய்துள்ள வழக்குரையில் பிரதிவாதி எனது இடத்தை ஆக்கிரமிப்பு செய்ததாகவும், அந்த ஆக்கிரமிப்பை நீக்கி எனது இடத்தை மீண்டும் எனக்கு தரவேண்டி நான் பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன. எனது வழக்குரையில் நான் பிராது தபசில் சொத்தை பொறுத்து செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் சுவாதீனப்பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல.

2. சர்வே எண்.308/3 ல் உள்ள 2 ஏக்கர் 56 சென்ட் இடத்தில் மேல்பாதி 45–1/2 சென்ட் இடத்தை பொறுத்து நான் இவ்வழக்கை தாக்கல் செ ய்துள்ளேன் என்றால் சரிதான். நான் எனது வழக்குரையில் மேற்கண்ட 2 ஏக்கர் 56 சென்ட் இடம் மொத்தமும் பண்டாரக்கண்ணுத்தேவர் என்ற வெள்ளையப்பதேவர் மற்றும் அவரது சகோதரருக்கு பாத்தியப்பட்டதாக கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனது வழக்குரையில் மேற்கண்ட 2 ஏக்கர் 56 சென்ட் இடத்தை பண்டாரக்கண்ணுத்தேவர் மற்றும் அவரது சகோதரர் தலா 1 ஏக்கர் 28 சென்ட் இடங்களாக பிரித்துக் கொண்டார்கள் என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். மேற்கண்ட 2 ஏக்கர் 56 சென்ட் இடத்தை மேற்குறிப்பிட்ட நபர்கள் தென்வடலாக பிரித்தார்களா அல்லது கிழமேலாக பிரித்தார்களா என குறிப்பிட்டு எனது வழக்குரையில் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

3. வடதலைவன்பட்டி கிராமத்தில் இருக்கும் வேலுதேவர் மகன் செல்லத்துரை நான்தான் என்றால் சரிதான். நான் பிராது தபசில் சொத்தை கிரையம் பெற்ற நபர்கள் வடதலைவன்பட்டி ஊரை சேர்ந்தவர்களா என்றால் அந்த ஊரை சேர்ந்தவர்கள்தான். கிரையதாரர்களின் விலாசம் வடதலைவன்பட்டி ஊரில் இருப்பதாக நான் கிரையம் பெற்ற ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிரையதாரர்கள் எனது

உறவினர்களா என்றால் இல்லை. பிராது தபசில் சொத்தை நான் கிரையம் பெறுவதற்கு முன்பு அந்த சொத்திற்கான வில்லங்க சான்றிதழ்களை பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

4. நான் பிராது தபசில் சொத்தை 20.11.1995 ம் தேதி கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெறுவதற்கு முன்பு சிவசுப்பிரமணியன் என்ற தர்மராஜிடம் ஒரு அடமான பத்திரம் பிறப்பித்துக் கொண்டேன் என்றால் சரிதான். மேற்கண்ட அடமானப்பத்திரம் 14.09.1995 ம் தேதி ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்கண்ட அடமான ஆவணத்தின் மூலம் 14 சென்ட் இடத்தை நான் அடமானம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட அடமானப்பத்திரத்தில் மேற்குறிப்பிட்ட 2 ஏக்கர் 56 சென்டில் கீழ்கடைசி 14 சென்ட் இடம் பொறுத்து அடமானம் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்கண்ட அடமான ஆவணம் பிறப்பிக்கப்பட்ட பிறகுதான் நான் பிராது தபசில் சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான்.

5. கொடுங்காலத்தேவரின் வாரிசுகள் விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர்களுள் 3 பேர் பெயர் தங்கராசு, முருகையா, செல்வராசு ஆகும். அவர்களுள் 4 வது நபர் பெயர் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. மேற்கண்ட செல்வராசுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் அவர்களுக்கு 2 பிள்ளைகள். மேற்கண்ட செல்வராசின் பிள்ளைகளுக்கு தற்போது எத்தனை வயது இருக்கும் என்றால் சுமார் 35–40 வயது இருக்கும். கொடுங்காலத்தேவரும், அவரது வாரிசுகளும் இந்து மதத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். மேற்கண்ட செல்வராஜ்ன் 2 பிள்ளைகளுள் ஒருவரின் பெயர் ஆல்வின்ஆம்புரோஸ் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. மேற்கண்ட செல்வராஜ்ன் வாரிசுகள் பற்றிய விபரம் எனக்கு எதுவும் தெரியாது. கொடுங்காலத்தேவரின் வாரிசுகளுள் ஒருவரான செல்வராசின் வாரிசுகள் பற்றிய விபரம் தெரியாது என்று கூறிய நிலையில் மேற்கண்ட செல்வராஜின் பிள்ளைகள் வயது பற்றி கூறிய விபரங்கள் பொய்யானவை என்றால் தெரியாமல் சொல்லிவிட்டேன்.

6. 1 ம் பிரதிவாதி 2006 ம் வருடத்தில் 14 சென்ட் இடத்தை கொடுங்காலத்தேவர் மகன் செல்வராஜ் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதிக்கு 1 ம் பிரதிவாதி மேற்கண்ட 14 சென்ட் இடத்தில் 10 சென்ட் இடத்தை கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2008 ம்

வருடத்திலேயே 2ம் பிரதிவாதி அவர் கிரையம் பெற்ற 10 சென்ட் இடத்தில் வீடு கட்டி காம்பவுண்ட் சுவர் கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். அப்பொழுதுதான் நான் அவர் வீடு கட்டுவதை தடுத்தேன். நான் எனது வழக்குரையில் 2013ம் வருடம் 2ம் பிரதிவாதி வீடு கட்டியதாக தெரிவித்து அதற்கு எதிராக காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் தெரிவித்துள்ளேன் என்றால் நான் எனது வழக்குரையில் 2013ம் வருடம் 2ம் பிரதிவாதி வீடு கட்டியதாக தெரிவிக்கவில்லை. 2013ம் வருடம் காவல்நிலையத்தில் 2ம் பிரதிவாதிக்கு எதிராக புகார் கொடுத்ததாக கூறியுள்ளேன். 2013ம் வருடம் பிராது தபசில் சொத்தை சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்வதற்கு மனு கொடுத்தேன் என்றால் சரிதான்.

7. 1ம் பிரதிவாதி வன்னிக்கோனேந்தலை சேர்ந்த செல்வராஜ்டமிருந்து சர்வே எண்.308/3ல் உள்ள 2 ஏக்கர் 56 சென்ட் இடத்தை மேல்பக்கம் 85 சென்டில் மேல்கடைசி 14 சென்ட் இடத்தை 2006ம் வருடம் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் 10–1/2 சென்ட் என்று குறிப்பிடப்படுவதற்கு பதிலாக 14 சென்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வன்னிகோனேந்தலை சேர்ந்த செல்வராஜ் என்பவரும், கொடுங்காலத்தேவர் மகன் செல்வராஜ் என்பவரும் வெவ்வேறு நபர்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்து வன்னிகோனேந்தலை சேர்ந்த செல்வராஜின் பூர்வீக சொத்து என்றாலும், அதில் கொடுங்காலத்தேவர் மகன் செல்வராஜ்க்கு எந்த உரிமையும் கிடையாது என்றாலும் சரியல்ல. நான் கிரையம் பெற்ற சொத்து சர்வே எண்.308/3ல் கீழ்கடைசியில் உள்ளது என்றாலும், 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்து மேற்கண்ட சர்வே எண்ணில் மேல்கடைசியில் உள்ளது என்றாலும் சரியல்ல. எனக்கு கிரையம் எழுதிக்கொடுத்த நபர்களுக்கு சர்வே எண்.308/3 ல் உள்ள இடத்தில் மேல்கடைசியில் உள்ள இடத்தில் எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. 2008ம் வருடத்திலேயே 1,2 பிரதிவாதிகள் அவர்கள் கிரையம் பெற்ற இடத்தில் வீடு கட்டி அனுபவித்து வருவதால் அவர்களுக்கு எதிராக நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு காலாவதிதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தை பொறுத்து செயலுறுத்துக்கட்டளை மற்றும் சுவாதீனப்பரிகாரங்கள் கோராததால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைநிறுத்தத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு 1,2

பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**